# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

## விசேட பண்டங்கள் மற்றும் சேவைகள் வரி

**சட்டத்தினால் விதிக்கப்பட்ட வரி, தீர்வை, அறவீடு, ஆயவரி அல்லது வேறேதேனும் விதிப்பனவு என்றவகையாகக் குறித்துரைக்கப்பட்ட பண்டங்கள் மற்றும் சேவைகள்மீது விதிக்கப்படற்பாலனவான பணத்தொகைகளுக்குப் பதிலாக, விசேட பண்டங்கள் மற்றும் சேவைகள் வரியொன்றை விதிப்பதற்காக ஏற்பாடுசெய்வதற்கும்; குறித்துரைக்கப்பட்ட பண்டங்கள் மற்றும் சேவைகள்மீது பன்மடங்கான வரி நடப்புமுறையொன்றின் பிரயோகத்துடனும் நிருவாகத்துடனும் இணைந்த சிக்கலானதன்மைகளைத் தவிர்ப்பதன்மூலம் அத்தகைய வரிகளைச் சேகரித்தலும் நிருவகித்தலும் தொடர்பாகக் கூடுதலான வினைத்திறனை உறுதிப்படுத்துவதற்கென வரிகளைச் செலுத்துவதில் சுய இணங்கியொழுகுகையை மேம்படுத்துவதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்காக ஏற்பாடுசெய்வதற்குமான தொரு சட்டமூலம்**

*நிதி அமைச்சர் அவர்களால் 2022, சனவரி மாதம் 20 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2022, சனவரி மாதம் 07 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

[ *101 ஆம் சட்டமூலம்* ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 60.00** **தபாற் செலவு : ரூபா 35.00**

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## விசேட பண்டங்கள் மற்றும் சேவைகள் வரி

*ச.வ.ஓ. 20/2021*

**சட்டத்தினால் விதிக்கப்பட்ட வரி, தீர்வை, அறவீடு, ஆயவரி அல்லது வேறேதேனும் விதிப்பனவு என்றவகையாகக் குறித்துரைக்கப்பட்ட பண்டங்கள் மற்றும் சேவைகள்மீது விதிக்கப்படற்பாலனவான பணத்தொகைகளுக்குப் பதிலாக, விசேட பண்டங்கள் மற்றும் சேவைகள் வரியொன்றை விதிப்பதற்காக ஏற்பாடுசெய்வதற்கும்; குறித்துரைக்கப்பட்ட பண்டங்கள் மற்றும் சேவைகள்மீது பன்மடங்கான வரி நடப்புமுறையொன்றின் பிரயோகத்துடனும் நிருவாகத்துடனும் இணைந்த சிக்கலான தன்மைகளைத் தவிர்ப்பதன்மூலம் அத்தகைய வரிகளைச் சேகரித்தலும் நிருவகித்தலும் தொடர்பாகக் கூடுதலான வினைத்திறனை உறுதிப்படுத்துவதற்கென வரிகளைச் செலுத்துவதில் சுய இணங்கியொழுகுகையை மேம்படுத்துவதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்காக ஏற்பாடுசெய்வதற்குமானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயர்

**1.** இச்சட்டம், 2022 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, விசேட பண்டங்கள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

விசேட பண்டங்கள் மற்றும் சேவைகள் வரியொன்றை விதித்தல்

**2.** (1) "விசேட பண்டங்கள் மற்றும் சேவைகள் வரி" எனவழைக்கப்படவேண்டிய அறவீடொன்று விதிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் இது இதற்கான அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் சட்டவாக்கத்தின் நியதிகளின்படி விதிக்கப்பட்ட வரி, தீர்வை, அறவீடு, ஆயவரி அல்லது வேறேதேனும் விதிப்பனவு என்பவற்றுக்கு அமைந்தனவாக்கப்பட்ட பின்வரும் குறித்துரைக்கப்பட்ட பண்டங்கள் மற்றும் சேவைகள்மீது செலுத்தப்படற்பாலதானவொரு கூட்டு வரியாகவிருத்தலும் வேண்டும்:-

(அ) குறித்துரைக்கப்பட்ட பண்டங்களாகவுள்ள மதுபானம், சிகரெட்டுகள் மற்றும் வாகனங்கள் (வாகனங்களைப் பொருத்துவதற்கான பாகங்களுட்பட); அத்துடன்

(ஆ) குறித்துரைக்கப்பட்ட சேவைகளாகவுள்ள தொலைத் தொடர்புகள் மற்றும் பந்தயம் பிடித்தலும் சூதாடுதலும்.

(2) விசேட பண்டங்கள் மற்றும் சேவைகள் வரியானது, (1) ஆம் உட்பிரிவிற் கையாளப்படும் குறித்துரைக்கப்பட்ட பண்டங்கள் அல்லது சேவைகளுக்கு மட்டுமே வரையறுக்கப்படுதல் வேண்டும்.

(3) அமைச்சர், காலத்துக்குக்காலம், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம்,-

(அ) அத்தகைய கட்டளை எந்த முறையான குறித்துரைக் கப்பட்ட பண்டங்கள் அல்லது சேவைகள் தொடர்பானதோ அந்த முறையான குறித்துரைக்கப்பட்ட பண்டங்களுக்கு அல்லது சேவைகளுக்கு, ஒன்றில் பெறுமானப்படி அல்லது குறிப்பாக ஏற்புடையற்பாலதான வரிவீதத்தைக் குறித்துரைத்தல் வேண்டும்; அல்லது

(ஆ) கட்டளையானது எந்த முறையான குறித்துரைக்கப்பட்ட பண்டம் அல்லது சேவை தொடர்பானதோ அந்த முறையான குறித்துரைக்கப்பட்ட பண்டம் அல்லது சேவை தொடர்பாக விசேட பண்டங்கள் மற்றும் சேவைகள் வரியைக் கணக்கிடுவதற்கான அடிப்படையைக் குறித்துரைத்தல் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒவ்வொரு கட்டளையும் அது அமைச்சரினால் இல்லாதொழிக்கப்படும் அத்தகைய காலம்வரை, அல்லது (3) ஆம் உட்பிரிவின்கீழ் அமைச்சரினால் அடுத்துப்பின்னரானவொரு கட்டளை ஆக்கப்படும் அத்தகைய காலம்வரை வலுவில் தொடர்ந்திருத்தல் வேண்டும்.

(5) மூன்றாம் உட்பிரிவின்கீழ் அமைச்சரினால் ஆக்கப்பட்ட அத்தகைய ஒவ்வொரு கட்டளையும், அமைச்சர் தனது கையொப்பத்தை அதில் இடுவதன்மேல் உடனடியாக நடைமுறையிலிருத்தல் வேண்டும்.

(6) அத்தகைய ஒவ்வொரு கட்டளையும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

(7) ஒவ்வொரு கட்டளையும், அது வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதக்காலப் பகுதியொன்றினுள் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்துக்காகப் பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அத்தகைய காலப்பகுதியினுள் பாராளுமன்றக்கூட்டமெதுவும் நடைபெறாதவிடத்து, அத்தகைய கட்டளை, அத்தகைய காலப்பகுதி முடிவுற்றபின்னர் நடைபெறும் பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தில் ஒரு பிரேரணையின்மூலம் அங்கீகாரத்துக்காகப் பாராளுமன்றத்தின்முன்னர் கொணரப்படுதல் வேண்டும்.

(8) பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்படுவதற்கு மறுக்கப்படும் அத்தகைய ஏதேனும் கட்டளை அத்தகைய தீர்மானத் தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

குறித்தசில பண்டங்களுக்கு அல்லது சேவைகளுக்கு விலக்களித்தல்

**3.** (1) (அ) இரண்டாம் பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், அமைச்சர், காலத்துக்குக்காலம், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம், அத்தகைய கட்டளையிற் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைக்கமைய அத்தகைய கட்டளையிற் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய எவையேனும் பண்டங்களை அல்லது சேவைகளை அல்லது அத்தகைய பண்டங்களின் அல்லது சேவைகளின் அத்தகைய ஏதேனும் வகுப்பை, தரத்தை, வகுதியை அல்லது விவரணத்தை இச்சட்டத்தின்கீழ் செலுத்தப்படற்பாலதான விசேட பண்டங்கள் மற்றும் சேவைகள் வரிக்கொடுப்பனவிலிருந்து விலக்களிக்கலாம்.

(ஆ) ஐயத்தைத் தவிர்ப்பதற்காக, இதற்கான அட்டவணையிற்றரப்பட்டுள்ள சட்டவாக்கங்களின் ஏற்பாடுகள், பந்தி (அ) வின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையிற் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய பண்டங்கள் மற்றும் சேவைகள் தொடர்பில் ஏற்புடையனவாதலாகாது.

(2) ஓர் உற்பத்தியாளர் அல்லது ஓர் இறக்குமதியாளர் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையிற் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு முரணாக எவையேனும் பண்டங்களை விற்பனைசெய்யுமிடத்து அல்லது கையுதிர்க்குமிடத்து, அத்தகைய உற்பத்தியாளர் அல்லது இறக்குமதியாளர், விசேட பண்டங்கள் மற்றும் சேவைகள் வரிக்கு அமைந்த அதேபோன்ற அத்தகைய பண்டங்களின்மீது இச்சட்டத்தின்கீழ் செலுத்தப்படற்பாலதாகவிருந்த அதே விசேட பண்டங்கள் மற்றும் சேவைகள் வரிக்கு ஆளாதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒவ்வொரு கட்டளையும், அது அமைச்சரினால் இல்லாதொழிக்கப்படும் அத்தகைய காலம்வரை வலுவில் தொடர்ந்திருத்தல் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின்கீழ் அமைச்சரினால் ஆக்கப்பட்ட அத்தகைய ஒவ்வொரு கட்டளையும், அமைச்சர் அதில் அவரது கையொப்பத்தை இடுவதன்மேல் உடனடியாக நடைமுறையிலிருத்தல் வேண்டும்.

(5) அத்தகைய ஒவ்வொரு கட்டளையும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

(6) ஒவ்வொரு கட்டளையும், அது வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதக்காலப்பகுதியொன்றினுள் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்துக்காகப் பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அத்தகைய காலப்பகுதியினுள் பாராளுமன்றக்கூட்டமெதுவும் நடைபெறாதவிடத்து, அத்தகைய கட்டளை, அத்தகைய காலப்பகுதி முடிவுற்றபின்னர் நடைபெறும் பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தில் ஒரு பிரேரணையின்மூலம் அங்கீகாரத்துக்காகப் பாராளுமன்றத்தின்முன்னர் கொணரப்படுதல் வேண்டும்.

(7) பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்படுவதற்கு மறுக்கப்படும் அத்தகைய ஏதேனும் கட்டளை அத்தகைய தீர்மானத் தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

*விசேட பண்டங்கள் மற்றும் சேவைகள் வரியை விதிக்கின்ற கட்டளை ஆக்கப்பட்ட பின்னர், இதற்கான அட்டவணையிற் தரப்பட்டுள்ள சட்டவாக்கங் களின் கீழ் அறவிடப்படும் வரியெதுவும் ஏற்புடையற் பாலதாகாது*

**4**. இரண்டாம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்று நடைமுறையில் உள்ளவிடத்து, இதற்கான அட்டவணையிற்றரப்பட்டுள்ள ஏதேனும் சட்டவாக்கத்தின் நியதிகளின்படி விதிக்கப்பட்ட ஏதேனும் வரி, தீர்வை, அறவீடு, ஆயவரி அல்லது வேறேதேனும் விதிப்பனவு, அத்தகைய கட்டளை நடைமுறைக்குவரும் தேதியிலிருந்தும் அதன்பின்னரும், இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட எவையேனும் குறித்துரைக்கப்பட்ட பண்டங்கள் அல்லது சேவைகள் தொடர்பில் ஏற்புடையற்பாலதாதலாகாது:

ஆயின், எவ்வாறாயினும், இதற்கான அட்டவணையிற்றரப் பட்டுள்ள சட்டவாக்கங்களின் ஏற்பாடுகள், அவசியமானவிடத்து, இச்சட்டத்தினதும் அதன்கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளினதும் ஏற்பாடுகளை மீறியமையை வலுவுறுத்தும், தடுக்கும் மற்றும் அதற்குத் தண்டனையளிக்கும் நோக்கத்துக்காக ஏற்புடையனவாகலாம்.

*திறைசேரிப் பிரதிச் செயலாளருக்கு விசேட பண்டங்கள் மற்றும் சேவைகள் வரியின் நிருவாகமும் சேகரிப்பும் பொறுப்பிக்கப் படுதல்*

**5**. (1) (அ) திறைசேரிச் செயலாளர், (இதனகத்துப்பின்னர் "பெயர் குறிக்கப்பட்ட அலுவலர்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) திறைசேரிப் பிரதிச் செயலாளரொருவரின் நோக்கெல்லையின்கீழ் கூறொன்றைத் தாபித்தல் வேண்டும்.

(ஆ) பெயர்குறிக்கப்பட்ட அலுவலர், இச்சட்டத்தின் நியதிகளின் பிரகாரம் விதிக்கப்பட்டு 9 ஆம் பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்ட வாறாகச் செலுத்தப்பட்ட விசேட பண்டங்கள் மற்றும் சேவைகள் வரியின் நிருவாகம், சேகரிப்பு மற்றும் வகைகூறவேண்டியமைக்கான பொறுப்புடைமை பொறுப்பிக்கப்பட்டவராதல் வேண்டும்.

(2) திறைசேரிச் செயலாளர், அவசியமெனக் கருதக்கூடியவாறாக, நிதி அமைச்சைச்சேர்ந்த அல்லது நிதி அமைச்சின் நோக்கெல்லை யினுள் வருகின்ற ஏதேனும் திணைக்களத்தைச்சேர்ந்த அத்தகைய எண்ணிக்கையினரான அலுவலர்களை அத்தகைய கூறுக்குக் குறித்தளித்தல் வேண்டும்.

(3) பெயர்குறிக்கப்பட்ட அலுவலர், இச்சட்டத்தின்கீழ் அவருக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர்மீது சுமத்தப்பட்ட அல்லது அவருக்குக் குறித்தளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியை (2) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி குறித்தளிக்கப்பட்ட எவரேனும் அலுவலருக்குக் கையளிக்கலாம்.

(4) அத்தகைய தத்துவம், கடமை அல்லது பணி கையளிக்கப்பட்ட அலுவலர், காலத்துக்குக்காலம், பெயர்குறிக்கப்பட்ட அலுவலரினால் வழங்கப்பட்ட பொதுவான மற்றும் விசேடமான பணிப்புக்கமைய, அத்தகைய தத்துவத்தை, கடமையை அல்லது பணியைப் பிரயோகித்தல், புரிதல் அல்லது நிறைவேற்றுதல் வேண்டும்.

விசேட பண்டங்கள் மற்றும் சேவைகள் வரியைச் செலுத்துவதற்கான பொறுப்பு

**6**. விசேட பண்டங்கள் மற்றும் சேவைகள் வரியானது, (இதனகத்துப்பின்னர், "வரிவிதிக்கப்படற்பாலவரான ஆள்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவிற்றரப்பட்டுள்ள எவையேனும் குறித்துரைக்கப்பட்ட பண்டங்களின் அல்லது சேவைகளின் ஒவ்வோர் உற்பத்தியாளரினாலும், இறக்குமதியாளரினாலும் அல்லது சேவை வழங்குநரினாலும் செலுத்தப்படற்பாலதாதல் வேண்டும்.

வரிவிதிக்கப்படற்பாலவர்களான ஆட்களைப் பதிவுசெய்தலும் பதிவை இல்லாதாக்குதலும்

**7**. (1) (அ) இரண்டாம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளை நடைமுறைக்குவரும் தேதியன்று எவையேனும் குறித்துரைக்கப்பட்ட பண்டங்களை உற்பத்திசெய்வதில் அல்லது இறக்குமதிசெய்வதில் அல்லது குறித்துரைக்கப்பட்ட எவையேனும் சேவைகளை வழங்குவதில் ஈடுபட்டுள்ள வரிவிதிக்கப்படற்பாலவரான எவரேனுமாள், அத்தகைய கட்டளை நடைமுறைக்கு வரும் தேதியிலிருந்து பதினான்கு நாட்களுக்குப் பிந்தாமல், வரிவிதிக்கப்படற்பாலவரான ஆளொருவராகப் பதிவுசெய்யப்படுவதற்காகப் பெயர்குறிக்கப்பட்ட அலுவலருக்கு விண்ணப்பமொன்றை அனுப்பிவைத்தல் வேண்டும்.

(ஆ) இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி ஆக்கப்பட்ட கட்டளையொன்று நடைமுறைக்குவரும் தேதிக்குப்பின்னர் எவையேனும் குறித்துரைக்கப்பட்ட பண்டங்களை உற்பத்திசெய்வதற்கு அல்லது இறக்குமதிசெய்வதற்கு அல்லது

எவையேனும் குறித்துரைக்கப்பட்ட சேவைகளை வழங்குவதற்கு உட்கருதுகின்ற ஆளொருவர், எவையேனும் குறித்துரைக்கப்பட்ட பண்டங்களை உற்பத்தி செய்யுமுன்னர் அல்லது இறக்குமதி செய்யுமுன்னர் அல்லது ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட சேவையை வழங்குமுன்னர், விதித்துரைக்கப்பட்ட கட்டணத்துடனும் ஆவணங்களுடனும் சேர்த்து, விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் பெயர்குறிக்கப்பட்ட அலுவலருக்கு விண்ணப்பமொன்றை அனுப்பிவைத்தல் வேண்டும்.

(இ) பதிவுக்காகப் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறை, ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்பட்டவாறாக இருத்தல் வேண்டும்.

(ஈ) அத்தகைய விண்ணப்பம் பதிவுக்காகப் பெறப்பட்டதன்மேல், பெயர்குறிக்கப்பட்ட அலுவலர், (2) ஆம், (3) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய வரிவிதிக்கப்படற்பாலவரான ஆளொருவராக அவ்வாளைப் பதிவுசெய்வதற்கு உடனடியாக முற்படுதல் வேண்டும்.

(2) பெயர்குறிக்கப்பட்ட அலுவலர், ஆளொருவரை வரிவிதிக் கப்படற்பாலவரான ஆளொருவராகப் பதிவுசெய்யுமுன்னர், அத்தகைய வரிவிதிக்கப்படற்பாலவரான ஆளினால் ஏலவே சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களை ஆதாரப்படுத்துவதற்கு அவசியமானவிடத்து மேலதிகத்தகவல்களை அல்லது ஆவணங்களைக் கோரலாமென்பதுடன் அவர் அத்தகைய தகவல்களையும் ஆவணங்களையும் பெயர்குறிக்கப்பட்ட அலுவலரினாற் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் வழங்குதலும் வேண்டும்.

(3) பெயர்குறிக்கப்பட்ட அலுவலர், சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் அல்லது ஆவணங்களின் மெய்யானதன்மைமீது நியாயமானவோர் ஐயமிருப்பின், அவ்வாளை வரிவிதிக்கப்படற் பாலவரான ஆளொருவராகப் பதிவுசெய்வதற்கு மறுக்கலா மென்பதுடன் அத்தகைய முடிபைச் செய்தலிலிருந்து பதினான்கு நாட்களினுள் அத்தகைய மறுப்புப்பற்றிய எழுத்திலான அறிவித்தலொன்றை, அதற்கான காரணங்களைக் குறிப்பிட்டு அத்தகைய ஆளுக்குச் சேர்ப்பிக்கலாம்.

(4) மூன்றாம் உட்பிரிவின்கீழ் மறுப்புப் பற்றிய அறிவித்தலைப் பெற்றதன்மீது, அத்தகைய ஆள், மறுப்புப்பற்றிய அறிவித்தல் அத்தகைய ஆளினாற் பெறப்பட்டதிலிருந்து பதினான்கு நாட்களினுள் அவரது விண்ணப்பத்துக்கு ஆதாரமான மேலதிக காரணங்களையும் ஆவணங்களையும் எடுத்துக்கூறி திறைசேரிச் செயலாளருக்குக் கோரிக்கையொன்றை அனுப்பிவைக்கலாம்.

(5) திறைசேரிச் செயலாளர், (4) ஆம் உட்பிரிவின்கீழ் அத்தகைய கோரிக்கையில் தரப்பட்டுள்ள காரணங்களையும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களையும் கவனத்துட்கொண்டதன்மேல், வரிவிதிக்கப்படற் பாலவரான ஆள் பதிவுக்காகத் தகவுடையவராவென்பதைத் தீர்மானித்து, இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக அவ்வாளை வரிவிதிக்கப்படற்பாலவரான ஆளொருவராகப் பதிவுசெய்வதற்கு முற்படலாம். திறைசேரிச் செயலாளர் வசதியாகக்கூடியளவு விரைவாக அவரது முடிபுபற்றி வரிவிதிக்கப்படற்பாலவரான ஆளுக்கு அறிவித்தல் வேண்டும்.

(6) அத்தகைய பதிவின்மேல், பெயர்குறிக்கப்பட்ட அலுவலர் அத்தகைய வரிவிதிக்கப்படற்பாலவரான ஆளுக்கு ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான படிவத்தில் பதிவுச் சான்றிதழொன்றை வழங்குதல் வேண்டும். அப்பதிவுச் சான்றிதழானது, அத்தகைய பதிவினால் மேவப்பட்ட குறித்துரைக்கப்பட்ட பண்டங்கள் அல்லது சேவைகள்மீதான மற்றும் அத்தகைய பதிவின் செல்லுபடிக்காலப்பகுதி பற்றிய தகவல்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(7) பெயர்குறிக்கப்பட்ட அலுவலர், ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்தில், அவ்வாறு பதிவுசெய்யப்பட்ட வரிவிதிக்கப்படற்பாலவர்களான ஆட்கள் பற்றிய இடாப்பொன்றைப் பேணுவித்தலும் வேண்டும்.

(8) (அ) (i) வரிவிதிக்கப்படற்பாலவரான ஆள் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட எவையேனும் குறித்துரைக்கப்பட்ட பண்டங்களை இறக்குமதி செய்யாதொழிந்துள்ளவிடத்து அல்லது

உற்பத்தி செய்யாதொழிந்துள்ளவிடத்து அல்லது எவையேனும் குறித்துரைக்கப்பட்ட சேவைகளை வழங்கா தொழிந்துள்ளவிடத்து;

(ii) அமைச்சர் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையை இல்லாதொழித்துள்ளவிடத்து; அல்லது

(iii) 2 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளை, 2 ஆம் பிரிவின் (8) ஆம் உட்பிரிவின்கீழ் இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படுமிடத்து,

பெயர்குறிக்கப்பட்ட அலுவலர், முறையீடுகளைச் செய்வதற்கான வாய்ப்பொன்றை அளித்தபின்னர், அத்தகைய இல்லாதாக்கு கைக்கான காரணங்களை வரிவிதிக்கப்படற்பாலவரான ஆளுக்குக் கொடுத்து அவரினால் கையொப்பமிடப்பட்ட எழுத்திலான ஒரு தொடர்பாடலினூடாக அவருக்கு அறிவித்திருந்து (6) ஆம் உட்பிரிவின்கீழ் அவருக்கு வழங்கப்பட்ட பதிவுச்சான்றிதழை இல்லாதாக்கலாம்.

(ஆ) இரண்டாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட எந்தக் குறித்துரைக்கப்பட்ட பண்டங்களின் இறக்குமதிக்காக அல்லது உற்பத்திக்காக அல்லது எந்தக் குறித்துரைக்கப்பட்ட சேவையை வழங்குவதற்காகப் பதிவானது செய்யப்பட்டதோ குறித்துரைக்கப்பட்ட அந்த எவையேனும் பண்டங்களை வரிவிதிக்கப்படற்பாலவரான ஆளொருவர் இறக்குமதிசெய்யாதொழிந்துள்ளவிடத்து அல்லது உற்பத்தி செய்யாதொழிந்துள்ளவிடத்து அல்லது குறித்துத்துரைக்கப்பட்ட அந்த ஏதேனும் சேவையை வழங்காதொழிந்துள்ளவிடத்து, (6) ஆம் உட்பிரிவின்கீழ் எந்த வரிவிதிக்கப்படற்பாலவரான ஆளுக்குப் பதிவுச் சான்றிதழொன்று வழங்கப்பட்டுள்ளதோ அத்தகைய வரிவிதிக்கப்படற்பாலவரான ஆள் அத்தகைய பதிவுச் சான்றிதழை இல்லாதாக்கும்படி கோரி பெயர் குறிக்கப்பட்ட அலுவலருக்கு விண்ணப்பிக்கலாம்.

(9) இரண்டாம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்று நடைமுறைக்குவரும் தேதியிலிருந்தும் அதன்பின்னரும் -

(அ) பதிவுச் சான்றிதழொன்றைப் பெற்றுக்கொள்ளாமல் இச்சட்டம் ஏற்புடையதாகின்ற எவையேனும் குறித்துரைக்கப்பட்ட பண்டங்களை இறக்குமதிசெய்கின்ற அல்லது உற்பத்திசெய்கின்ற அல்லது ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட சேவையை வழங்குகின்ற;

(ஆ) எவையேனும் குறித்துரைக்கப்பட்ட பண்டங்கள் அல்லது சேவைகள் தொடர்பாக முக்கியமானவொரு விபரத்தில் பொய்யானதாகவுள்ள அல்லது பிழைவழியுய்க்கின்ற ஒரு கூற்றை இச்சட்டத்தின்கீழ் அளிக்கின்ற அல்லது தொடர்பாடலைச் செய்கின்ற ; அல்லது

(இ) விசேட பண்டங்கள் மற்றும் சேவைகள் வரிக் கொடுப்பனவை வேண்டுமென்று தட்டிக்கழிக்கின்ற அல்லது தட்டிக்கழிக்க எத்தனிக்கின்ற,

வரிவிதிக்கப்படற்பாலவரான எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் சுருக்கவிளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் மூன்று மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஓராண்டுக்குக் குறையாதவொரு காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(10) ஐயத்தைத் தவிர்ப்பதற்காக, வரிவிதிக்கப்படற்பாலவரான ஆளொருவர், இச்சட்டம் ஏற்புடையதாகவிராத எவையேனும் பண்டங்களை இறக்குமதிசெய்யலாம் அல்லது உற்பத்திசெய்யலாம் அல்லது ஏதேனும் சேவையை வழங்கலாம்; இப்பட்சத்தில், இயைபான ஏற்புடையற்பாலனவான சட்டங்களின் நியதிகளின்படி விதிக்கப்பட்டு ஏற்புடையற்பாலதாகவுள்ள ஒரு வரி, தீர்வை, அறவீடு, ஆயவரி அல்லது வேறேதேனும் விதிப்பனவு, இச்சட்டத்தின்கீழ் மேவப்படாத அத்தகைய வேறு பண்டங்கள் மற்றும் சேவைகள் தொடர்பில் ஏற்புடையதாதல் வேண்டும்.

வரிவிதிக்கப் படற்பாலவரான ஆளொருவரினால் விபரத் திரட்டுக்கள் கொடுத்துதவப் படுதல்

**8.** (1) இச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்படுகின்ற ஒவ்வொரு வரிவிதிக்கப்படற்பாலவரான ஆளும், ஒவ்வொரு காலாண்டினதும் முடிவுக்குப்பின்னர் மாதத்தின் இருபதாம் நாளன்று அல்லது அதற்குமுன்னர், பின்வருவனவற்றுடன் சேர்த்து விதித்துரைக்கப் பட்ட படிவத்தில் விபரத்திரட்டொன்றைப் பெயர்குறிக்கப்பட்ட அலுவலருக்குக் கொடுத்துதவுதல் வேண்டும்:-

(அ) தொடர்புபட்ட காலப்பகுதி தொடர்பில் தொடர்புபட்ட பொருட்பதிவேட்டின் உருப்படியான சரிபார்த்தலை உறுதிப்படுத்தி விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் ஒரு தகைமைபெற்ற கணக்காய்வாளரினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்று; அத்துடன்

(ஆ) இறக்குமதிசெய்யப்பட்ட அல்லது உற்பத்திசெய்யப்பட்ட குறித்துரைக்கப்பட்ட பண்டங்கள் அல்லது வழங்கப்பட்ட குறித்துரைக்கப்பட்ட சேவைகள் அல்லது கொள்வனவு செய்யப்பட்ட மூலப்பொருட்கள் தொடர்பாக ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்படக்கூடிய வாறான அத்தகைய விபரங்களைக் கொண்டுள்ள ஆவணங்கள்.

(2) (அ) எவையேனும் குறித்துரைக்கப்பட்ட பண்டங்களை ஒரு வரிவிதிக்கப்படற்பாலவரான ஆளின் சொந்தப் பாவனை நோக்கத்துக்காக இறக்குமதிசெய்துள்ள அத்தகைய ஆளிடமிருந்து (1) ஆம் உட்பிரிவின்கீழான விபரத்திரட்டொன்று தேவைப்படுத்தப் படுதலாகாது.

(ஆ) இவ்வுட்பிரிவின் நோக்கத்துக்காகச் "சொந்தப் பாவனை" என்பது, இதற்கான அட்டவணையிற்றரப்பட்டுள்ள ஏதேனும் சட்டவாக்கத்தின்கீழ் இலாபத்துக்காக அல்லது வர்த்தக ஈட்டுகைக்காகப் பயன்படுத்தப்படாதிருக்கவேண்டிய ஒரு தொகை என்று பொருளாதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் விபரத்திரட்டொன்றைக் கோப்பிடுவதற்குத் தவறுகின்ற வரிவிதிக்கப்படற்பாலவரான ஆளொருவர் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் குற்றத்

தீர்ப்பளிக்கப்படுவதன்மீது ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது மூன்று மாதங்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

விசேட பண்டங்கள் மற்றும் சேவைகள் வரியைச் செலுத்தும் முறை

**9**. *(1)* இரண்டாம் பிரிவின்கீழ் விதிக்கப்பட்டதும், ஒரு வரிவிதிக்கப்படற்பாலவரான ஆளினால் செலுத்தப்படற்பாலதுமான விசேட பண்டங்கள் மற்றும் சேவைகள் வரி, இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகப் பெயர்குறிக்கப்பட்ட அலுவலரின் பெயரில் திறக்கப்பட்டுப் பேணப்பட்ட கணக்கொன்றுக்கு இலத்திரனியல் நிதியக் கைமாற்றுகை என்றவகையாக, முறையான வரிவிதிக்கப்படற்பாலவரான ஆளினால் நேரடியாகச் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய கொடுப்பனவு திரட்டு நிதியத்துக்கான ஒரு வரவாகக் கருதப்படுதலும் வேண்டும்.

*(2)* விசேட பண்டங்கள் மற்றும் சேவைகள் வரியைச் செலுத்துவதற்கு ஆளாகவுள்ள ஒவ்வொரு வரிவிதிக்கப்படற்பாலவரான ஆளும் அத்தகைய கொடுப்பனவைக் கீழே தரப்பட்டுள்ள நேரங்களிலும் முறையிலும் செய்தல் வேண்டும்:-

(அ) எவையேனும் குறித்துரைக்கப்பட்ட பண்டங்களை இறக்குமதிசெய்கின்ற ஒரு வரிவிதிக்கப்படற்பாலவரான ஆள், விசேட பண்டங்கள் மற்றும் சேவைகள் வரியை, அத்தகைய குறித்துரைக்கப்பட்ட பண்டங்கள் சுங்கப் பண்டகசாலையிலிருந்து அல்லது அத்தகைய பண்டங்கள் இலங்கையினுள் இறக்குமதி செய்யப்பட்டதன்மேல் அவை உடனடியாகக் களஞ்சியப்படுத்தப்பட்ட அத்தகைய வேறு இடத்திலிருந்து அகற்றப்படுவதற்கு முன்னர் செலுத்துதல் வேண்டும்:

ஆயின், விசேட பண்டங்கள் மற்றும் சேவைகள் வரியைக் கணிப்பீடுசெய்யும் நோக்கத்துக்காக இறக்குமதித் தேதியானது, எந்தப் பண்டங்கள்மீது வரி செலுத்தப்படற்பாலதாகவுள்ளதோ அத்தகைய பண்டங்கள் தொடர்பான நுழைவுப்பட்டியல் இலங்கைச் சுங்கத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்ட தேதியாகக் கருதப்படுதல் வேண்டும்;

(ஆ) எவையேனும் குறித்துரைக்கப்பட்ட பண்டங்களை உற்பத்திசெய்கின்ற வரிவிதிக்கப்படற்பாலவரான ஆளொருவர் அத்தகைய உற்பத்திசெய்யப்பட்ட பண்டங்கள் அத்தகைய உற்பத்தியாளரின் உற்பத்திச் செயலிடத்தை விட்டுநீங்கும் நாளுக்கு ஒருநாளுக்கு முன்னர் விசேட பண்டங்கள் மற்றும் சேவைகள் வரியைச் செலுத்துதல் வேண்டும்; அல்லது

(இ) ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட சேவையை வழங்குகின்ற வரிவிதிக்கப்படற்பாலவரான ஆளொருவர், முன்னைய மாதத்தின்போது வழங்கப்பட்ட அத்தகைய சேவை தொடர்பாக ஒவ்வொரு மாதத்தினதும் பத்தாம் நாளுக்கு முன்னர் விசேட பண்டங்கள் மற்றும் சேவைகள் வரியைச் செலுத்துதல் வேண்டும்.

(3) மேலே தரப்பட்டுள்ளவாறு செலுத்தப்படாத ஏதேனும் விசேட பண்டங்கள் மற்றும் சேவைகள் வரி, தவணைதவறுதலில் உள்ளதெனக் கருதப்படுதல் வேண்டும்.

*பெயர்குறிக்கப்பட்ட அலுவலரினால் ஆவணங்கள் சரிபார்க்கப் படுதல்*

**10.** (1) ஒன்பதாம் பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட முறையில் விசேட பண்டங்கள் மற்றும் சேவைகள் வரிக் கொடுப்பனவின்மேல், வரிவிதிக்கப்படற்பாலவரான ஆள், பெயர்குறிக்கப்பட்ட அலுவலரினால் குறித்துரைக்கப்படக்கூடிய அத்தகைய படிவத்திலுள்ள உள்ளீடுகளின் செம்மையைச் சரிபார்ப்பதனை வசதிப்படுத்தக்கூடியதாகக் குறித்துரைக்கப்பட்ட பண்டங்களை இறக்குமதிசெய்தல் அல்லது உற்பத்திசெய்தல்மீதான அல்லது குறித்துரைக்கப்பட்ட சேவைகளை வழங்குதல்மீதான இயைபான ஆவணங்களின் ஊடுகதிர்ப்படமெடுக்கப்பட்ட பிரதிகளுடன் சேர்த்து அத்தகைய படிவத்தில் அவ்வாறு செய்யப்பட்ட ஒவ்வொரு கொடுப்பனவுபற்றிய விபரங்களையும் ஒழுங்குவிதிகளின்மூலம் விதித்துரைக்கப்படக்கூடியவாறாகப் பெயர்குறிக்கப்பட்ட அலுவலரின் மின்னஞ்சல் முகவரியொன்றுக்கு வரிவிதிக்கப் படற்பாலவரான ஆள் இலத்திரனியல்முறையில் சமர்ப்பித்தல் வேண்டும். பெயர்குறிக்கப்பட்ட அலுவலர் அத்தகைய ஒவ்வொரு கொடுப்பனவையும் இயைபான ஆவணங்களின் பெறுகையையும் நியாயமானவொரு காலத்தினுள் ஒப்புக்கொள்ளுதல் வேண்டும்.

(2) (அ) பெயர்குறிக்கப்பட்ட அலுவலர், (1) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படியும் (8) ஆம் பிரிவின் நியதிகளின்படி விபரத்திரட்டுகளிலும் சேர்த்தனுப்பப்படும் ஆவணங்களிலும் வழங்கப்பட்ட தகவல்களைச் சரிபார்த்தபின்னர், இச்சட்டத்தின் நியதிகளின்படி அத்தகைய வரிவிதிக்கப்படற்பாலவரான ஆளினால் செலுத்தப்படற்பாலதான விசேட பண்டங்கள் மற்றும் சேவைகள் வரி முறையாகச் செலுத்தப்பட்டுள்ளதெனத் தீர்மானித்து உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(ஆ) அத்தகைய சரிபார்த்தல் நடைமுறை பூர்த்திசெய்யப்பட்ட தன்மேல், (1) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி சமர்ப்பிக்கப்பட்டு அத்தகைய படிவத்தில் உள்ளடக்கப்பட்ட அல்லது அத்தகைய படிவத்தில் தரப்பட்டுள்ள தகவல்களை ஆதாரப்படுத்துகின்ற சேர்த்தனுப்பப்படும் ஆவணங்களின் விபரங்கள்பற்றிய செம்மைதொடர்பில் ஐயப்படுவதற்கான காரணத்தைப் பெயர் குறிக்கப்பட்ட அலுவலர் கொண்டிருப்பின், விசேட பண்டங்கள் மற்றும் சேவைகள் வரியாகச் செலுத்தப்படற்பாலதான சரியான தொகை செலுத்தப்பட்டுள்ளமைக்கான எண்பிப்பாக ஆவண முறையான அல்லது வேறு சான்று உட்பட்ட அத்தகைய வேறு தகவல்களைக் கொடுத்துதவும்படி பெயர்குறிக்கப்பட்ட அலுவலர் வரிவிதிக்கப்படற்பாலவரான ஆளை அல்லது அத்தகைய ஆளின் அதிகாரமளிக்கப்பட்ட முகவரைத் தேவைப்படுத்தலாம்.

(3) அத்தகைய சரிபார்த்தல் நடைமுறையில், பெயர்குறிக்கப்பட்ட அலுவலர், விடயத்துக்கேற்ப, சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதி, உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதி, தொலைத் தொடர்புகள் பணிப்பாளர் தலைமையதிபதி, மதுவரி ஆணையாளர் தலைமையதிபதி அல்லது அத்தகைய வேறு இயைபான அதிகாரி என்போரிடமிருந்து மேலதிகத் தகவல்களை, ஆவணங்களை அல்லது உதவியைக் கோரலாம்; அவர்கள், தேசியப் பொருளாதாரத்தின் அக்கறைகருதி, முன்னுரிமை விடயமொன்றாக, வேறெவையேனும் எழுத்திலான சட்டங்களில் முரணாக எது எவ்வாறிருப்பினும், பெயர்குறிக்கப்பட்ட அலுவலரினால் தேவைப்படுத்தப்பட்டவாறான அத்தகைய உதவியை அளித்தல் வேண்டும்.

(4) மேலதிகத் தகவல்கள் பெறப்பட்டதன்மேல் அல்லது ஏதேனும் பதில் கிடைக்காதபோது, பெயர்குறிக்கப்பட்ட அலுவலர், கொடுத்துதவப்பட்ட விபரங்களின் சரியானதன்மை அல்லது செம்மைபற்றி நியாயமான ஐயத்தை இன்னமும் கொண்டுள்ள விடத்து, வரிவிதிக்கப்படற்பாலவரான ஆளுக்கு அத்தகைய ஐயத்துக்கான ஏதுக்கள்பற்றிப் பெயர்குறிக்கப்பட்ட அலுவலரினால் எழுத்தில் தெரிவிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் வரிவிதிக்கப்படற்பாலவரான ஆளின் நிலைப்பாட்டுக்கு ஆதாரமாக எழுத்திலான கூற்றொன்றைச் சமர்ப்பிப்பதற்கான வாய்ப்பொன்று அவருக்கு அளிக்கப்படுதலும் வேண்டும்.

(5) பெயர்குறிக்கப்பட்ட அலுவலர், அத்தகைய வரிவிதிக்கப் படற்பாலவரான ஆளினால் செய்யப்பட்ட முறையீடுகள் எவையேனுமிருப்பின் அவற்றைக் கவனத்துட்கொண்டதன்பின்னர் இயைபான குறித்துரைக்கப்பட்ட பண்டங்கள் அல்லது சேவைகள்மீது செலுத்தப்படற்பாலதான விசேட பண்டங்கள் மற்றும் சேவைகள் வரித்தொகையைத் தீர்மானித்தல் வேண்டுமென்பதுடன் இயைபான வரிவிதிக்கப்படற்பாலவரான ஆளுக்கு அவரது தீர்மானத்தை அறிவித்தலும் வேண்டும். அத்தகைய வரிவிதிக்கப்படற்பாலவரான ஆளினால் விசேட பண்டங்கள் மற்றும் சேவைகள் வரியாக ஏலவே செலுத்தப்பட்ட தொகைக்கும் சரிபார்த்தலின்பின்னர் செலுத்தப்படற்பாலதாக விசேட பண்டங்கள் மற்றும் சேவைகள் வரியெனப் பெயர்குறிக்கப்பட்ட அலுவலரினால் தீர்மானிக்கப்பட்டவாறான தொகைக்கும் இடையேயான வித்தியாசமாகவுள்ளதும் விசேட பண்டங்கள் மற்றும் சேவைகள் வரியாக வருமதியாகவுள்ளதுமான ஏதேனும் மீதித்தொகையை அத்தகைய வரிவிதிக்கப்படற்பாலவரான ஆள் முழுமையாகச் செலுத்துதல் வேண்டும். பெயர்குறிக்கப்பட்ட அலுவலரின் தீர்மானத்தைக் கொண்டுள்ள அறிவித்தல் எழுத்திலிருத்தல் வேண்டுமென்பதுடன் தீர்மானத்தின் அடிப்படையை உள்ளடக்குதலும் வேண்டும்.

(6) விசேட பண்டங்கள் மற்றும் சேவைகள் வரியாக வரிவிதிக் கப்படற்பாலவரான ஆளொருவரினாற் செலுத்தப்பட்ட தொகை, பெயர்குறிக்கப்பட்ட அலுவலரினால் தீர்மானிக்கப்பட்டவாறு வரிவிதிக்கப்படற்பாலவரான ஆளினாற் செலுத்தப்படற்பாலதான

தொகையிலும் பார்க்க விஞ்சுதலாகவுள்ளதெனக் காணப்படுமிடத்து, பெயர்குறிக்கப்பட்ட அலுவலர், அதுபற்றி வரிவிதிக்கப்படற்பாலவரான ஆளுக்கு அறிவித்தல் வேண்டுமென்பதுடன் விஞ்சுதலாகச் செலுத்தப்பட்ட தொகையை வரிவிதிக்கப்படற்பாலவரான ஆளுக்கு மீளளிப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தலும் வேண்டும். மீளளிப்புகளைச் செய்வதில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறையும் ஒழுங்குவிதிகளின்மூலம் விதித்துரைக்கப்பட்டவாறாகவிருத்தல் வேண்டும்.

(7) இப்பிரிவின் நியதிகளின்படி செய்யப்பட்ட பெயர்குறிக்கப் பட்ட அலுவலரின் தீர்மானத்தினால் இன்னலுறும் எவரேனும் வரிவிதிக்கப்படற்பாலவரான ஆள், அத்தகைய தீர்மானம் அத்தகைய வரிவிதிக்கப்படற்பாலவரான ஆளுக்குச் சேர்ப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து பதினான்கு நாட்களினுள் அத்தகைய முடிபுக்கெதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்யலாம்.

*பெயர்குறிக்கப் பட்ட அலுவலரின் தீர்மானத்துக் கெதிரான மேன்முறை யீடுகள்*

**11.** (1) மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு ஒரு மேன்முறையீடு செய்யப்படுமிடத்து, மேன்முறையீட்டாளர் 10 ஆம் பிரிவின் நியதிகளின்படி பெயர்குறிக்கப்பட்ட அலுவலரினால் தீர்மானிக்கப் பட்டவாறு விசேட பண்டங்கள் மற்றும் சேவைகள் வரியாகச் செலுத்தப்படற்பாலதான மொத்தத் தொகையை அதேநாளன்று பின்வரும் முறையிற் செலுத்துதல் வேண்டும்:-

(அ) செலுத்தப்படற்பாலதான மொத்தத் தொகையின் ஐம்பது சதவீதம் 9 ஆம் பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட கணக்கினுட் செலுத்தப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) செலுத்தப்படற்பாலதான மொத்தத் தொகையின் ஐம்பது சதவீதம், பெயர்குறிக்கப்பட்ட அலுவலரின் சார்பில் வழங்கப்பட்டதும் கோரிக்கையின்மீது செலுத்தப்படற் பாலதும் ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியினால் வழங்கப்பட்டதுமான வங்கி உத்தரவாதம் என்றவகையாகச் செலுத்தப்படுதல் வேண்டும்.

(2) அத்தகைய வங்கி உத்தரவாதம், மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் மேன்முறையீடு தீர்மானிக்கப்படும்வரை செல்லுபடியாதல் வேண்டும் அல்லது அவசியமாகக்கூடியவாறு மேன்முறையீட்டாளரினால் செல்லுபடியாக்கப்படுதல் வேண்டும்.

(3) மேன்முறையீட்டு நீதிமன்றம் பெயர்குறிக்கப்பட்ட அலுவலரின் சார்பில் மேன்முறையீட்டைத் தீர்மானிக்கும் பட்சத்தில், அவர், அத்தகைய தீர்மானத்தின்மேல் மேன்முறையீடானது மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் முடிவுறாதிருந்த முழுக்காலப்பகுதியையும் மேவுகின்ற சட்டப்படியான வட்டியுடன்சேர்த்து பணத்தொகையை அறவிடுவதற்கு வங்கி உத்தரவாதத்தின்மீதான உரிமைக் கோரிக்கையொன்றைச் செய்தல் வேண்டும்.

(4) மேன்முறையீட்டு நீதிமன்றம் மேன்முறையீட்டாளரின் சார்பில் மேன்முறையீட்டைத் தீர்மானிக்குமிடத்து, பெயர்குறிக்கப்பட்ட அலுவலர், வசதியானளவு விரைவாக, (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் நியதிகளின்படி செலுத்தப்பட்ட பணத்தொகையை, மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மேன்முறையீடு முடிவுறாதிருந்த முழுக் காலப்பகுதியையும் மேவுகின்ற சட்டப்படியான வட்டியுடன்சேர்த்து மீளளித்தல் வேண்டுமென்பதுடன் இயன்றளவு வசதியான மிக்க வெள்ளெனவான காலப்பகுதியில் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் நியதிகளின்படி கொடுக்கப்பட்ட வங்கி உத்தரவாதத்தைத் திருப்பிக்கொடுத்தலும் வேண்டும்.

(5) பெயர்குறிக்கப்பட்ட அலுவலரின் தீர்மானமொன்றுக்கெதிராக இச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் (7) ஆம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட காலத்தினுள் செல்லுபடியான மேன்முறையீடெதுவும் செய்யப்பட்டிராதபோது, விசேட பண்டங்கள் மற்றும் சேவைகள் வரியாக வருமதியாகவுள்ள மீதித்தொகை மற்றும் 14 ஆம் பிரிவின் நியதிகளின்படி அத்தகைய வரிமீது விதிக்கப்பட்ட இயைபான தண்டம் தவணைதவறுகையிலுள்ள விசேட பண்டங்கள் மற்றும் சேவைகள் வரியாகவிருத்தல் வேண்டும்.

*விசேட பண்டங்கள் மற்றும் சேவைகள் வரியானது தவணை தவறியதாக விருக்குமிடத்து பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறை*

**12.** (1) ஏதேனும் விசேட பண்டங்கள் மற்றும் சேவைகள் வரி தவணைதவறியதாகவுள்ளவிடத்து, பெயர்குறிக்கப்பட்ட அலுவலர், பொருத்தமான மற்றும் துரிதமான அறவீட்டு நடவடிக்கையை எடுக்கும்படி உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமை அதிபதியைத் தேவைப்படுத்துதல் வேண்டுமென்பதுடன் உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதி தவணை தவறுகையிலுள்ள விசேட பண்டங்கள் மற்றும் சேவைகள் வரியின் விபரங்களையும் தவணைதவறியவரின் பெயரும் முகவரியும் பற்றிய விபரங்களையும் கொண்டுள்ள சான்றிதழொன்றை மாவட்டச் செயலாளர் ஒருவருக்கு வழங்குதலும் வேண்டும்; அத்துடன் அத்தகைய சான்றிதழ் எந்த மாவட்டச் செயலாளருக்கு வழங்கப் படுகின்றதோ அந்த மாவட்டச் செயலாளர், அசைவுள்ள ஆதனத்தின் கைப்பற்றுகை மற்றும் விற்பனையின்மூலம், அச்சான்றிதழிற் பெயர்குறிப்பிடப்பட்ட தவணைதவறியவரிடமிருந்து தவணை தவறுகையிலுள்ள விசேட பண்டங்கள் மற்றும் சேவைகள் வரியை அறவிடச் செய்வதற்கு இத்தால் தேவைப்படுத்தவும்படுகின்றார்.

(2) இப்பிரிவின் நோக்கங்களுக்காக அசைவுள்ள ஆதனத்தின் கைப்பற்றுகையானது, அதற்கென மிக்க உசிதமானதென அத்தகைய மாவட்டச் செயலாளர் கருதவேண்டிய அத்தகைய முறையில் (101 ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவையின்கீழ் பயனுறுத்தப்படுதல் வேண்டு மென்பதுடன் ஏதேனும் அசைவுள்ள ஆதனம் அத்தகைய மாவட்டச் செயலாளரினால் அவ்வாறு கைப்பற்றப்பட்டவுடன் அத்தகைய ஆதனம்பற்றிய நிரலொன்று அவரினால் உடனடியாகத் தயாரிக்கப்பட்டுக் கையொப்பமிடப்படுதலும் வேண்டும்; அத்துடன் அது தவணைதவறியவருக்குக் கொடுக்கப்படுதல் வேண்டு மென்பதுடன் அதன் பிரதியொன்று உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதிக்குக் கொடுத்துதவப்படுதலும் வேண்டும்.

(3) அவ்வாறு கைப்பற்றப்பட்ட ஆதனம்–

(அ) இலங்கை ரூபாக்களிலான காசாக இருக்குமிடத்து, அத்தகைய காசு, கைப்பற்றுதலின் ஆகுசெலவுகளையும் விதிப்பனவுகளையும் கொடுப்பனவுசெய்வதற்காக

முதலில் பயன்படுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் ஏதேனும் மீதி, தவணைதவறுகையிலுள்ள விசேட பண்டங்கள் மற்றும் சேவைகள் வரியைக் கொடுத்துத் தீர்ப்பதற்குப் பயன்படுத்தப்படுதலும் வேண்டும்;

(ஆ) பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்திலான காசாக இருக்குமிடத்து, அத்தகைய காசு, ஏதேனும் உரிம மளிக்கப்பட்ட வர்த்தக வங்கியில் வைப்பிலிடப்பட்டு அதிலிருந்தான வரும்படிகள் கைப்பற்றுதலின் ஆகுசெலவுகளையும் விதிப்பனவுகளையும் கொடுப்பனவு செய்வதற்காகப் பயன்படுத்தப்படுதல் வேண்டு மென்பதுடன் ஏதேனும் மீதி, தவணைதவறுகையிலுள்ள விசேட பண்டங்கள் மற்றும் சேவைகள் வரியைக் கொடுத்துத்தீர்ப்பதற்குப் பயன்படுத்தப்படுதலும் வேண்டும்; அத்துடன்

(இ) காசல்லாத அசைவுள்ள ஆதனமாக இருக்குமிடத்து, அத்தகைய ஆதனம் தவணைதவறியவரின் ஆகுசெலவு களாகவும் விதிப்பனவுகளாகவும் ஏழுநாட்களுக்கு வைத்திருக்கப்படுதல் வேண்டும். தவணைதவறியவர், தவணைதவறுகையிலுள்ள விசேட பண்டங்கள் மற்றும் சேவைகள் வரியை இணைந்த ஆகுசெலவுகளுடனும் விதிப்பனவுகளுடனும் சேர்த்து சொல்லப்பட்ட ஏழுநாட்களினுள் செலுத்தாவிடின், மாவட்டச் செயலாளர் அத்தகைய ஆதனத்தைப் பகிரங்க ஏலத்தின்மூலம் விற்பனைசெய்வித்தல் வேண்டும் அல்லது அத்தகைய ஆதனம் ஒரு கைமாற்றத்தகு சாதனமாக அல்லது ஏதேனும் கூட்டுத்தாபனத்திலான அல்லது பகிரங்கக் கம்பெனியிலான ஒரு பங்காக இருக்குமிடத்து, நாளின் சந்தைவீதத்தில் ஒரு தரகரினூடாக அதனை விற்பனை செய்வித்தல் வேண்டும்.

(3) மூன்றாம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட விற்பனையொன்றின்மூலம் தேறிப்பெறப் பட்ட பணத்தொகை பின்வருமாறு பயன்படுத்தப்படுதல் வேண்டும்:-

(அ) முதலாவதாக, ஆதனத்தைக் கைப்பற்றுதல், வைத்திருத்தல் மற்றும் விற்பனைசெய்தலின் ஆகுசெலவுகளையும் விதிப்பனவுகளையும் கொடுப்பனவு செய்வதிலும்; அத்துடன்

(ஆ) இரண்டாவதாக, தவணைதவறுகையிலுள்ள விசேட பண்டங்கள் மற்றும் சேவைகள் வரியைக் கொடுத்துத் தீர்ப்பதிலும்; அத்துடன் ஏதேனும் மீதி அவ்வாறு கைப்பற்றப்பட்ட ஆதனத்தின் சொந்தக்காரருக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

(5) ஆதனத்தின் கைப்பற்றுகை எதுவும் பயனுறுத்தப்படவில்லை என்பது எவ்வாறிருப்பினும், இப்பிரிவின் கீழ் தவணை தவறியவருக்கெதிராக எவரேனும் மாவட்டச் செயலாளரினால் எடுக்கப்பட்ட நடவடிக்கையில் அவரினால் உறப்பட்ட நியாயமான செலவுகளை அத்தகைய தவணைதவறியவரிடமிருந்து அறவிடுவது அவருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(6) மூன்றாம் உட்பிரிவின் நோக்கத்துக்காக, "அசைவுள்ள ஆதனம்" என்னும் சொல்லமைப்பு, ஒரு தொழிற்சாலையின் நிலத்துடன் இணைக்கப்பட்ட ஏதேனும் பொறித்தொகுதியையும் அல்லது எந்திரத்தொகுதியையும் உள்ளடக்கும்.

(7) ஏதேனும் விசேட பண்டங்கள் மற்றும் சேவைகள் வரி தவணைதவறியதாக இருக்குமிடத்தும், (1) ஆம் உட்பிரிவில் ஏற்பாடுசெய்யப்பட்ட வழிவகைகள்மூலம் அதனை அறவிடுவது செயல்முறைக்குகந்ததல்ல அல்லது உசிதமானதல்ல என ஆணையாளர் தலைமையதிபதி அபிப்பிராயப்படுமிடத்தும், அவர் தவணைதவறியவர் வதிகின்ற அல்லது தவணைதவறியவரினால் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட அசைவுள்ள அல்லது அசைவற்ற ஏதேனும் ஆதனம் அமைந்துள்ள ஏதேனும் மாவட்டத்தில் நியாயாதிக்கங்கொண்டுள்ள ஒரு மாவட்ட நீதிமன்றத்துக்கு, தவணைதவறுகையிலுள்ள விசேட பண்டங்கள் மற்றும் சேவைகள் வரி பற்றிய விபரங்களையும் விசேட பண்டங்கள் மற்றும் சேவைகள் வரி எந்தத் தவணைதவறியவரினால் செலுத்தப்படற்பாலதோ

அந்தத் தவணைதவறியவரின் பெயரும் முகவரியும் பற்றிய விபரங்களையும் கொண்டுள்ள சான்றிதழொன்றை அவர் வழங்கலாமென்பதுடன் அதன்மேல், நீதிமன்றம், தவணை தவறியவரின் அசைவுள்ள அல்லது அசைவற்ற எல்லா அல்லது ஏதேனும் ஆதனத்தையும் அல்லது தவணை தவறுகையிலுள்ள விசேட பண்டங்கள் மற்றும் சேவைகள் வரியை அறவிடுவதற்காக அவசியமெனப் பிசுக்கால் கருதக்கூடியவாறான அதன் அத்தகைய பாகத்தையும் கைப்பற்றி விற்பனைசெய்யும்படி அவருக்கு அதிகாரமளித்து அவரைத் தேவைப்படுத்துகின்ற நிறைவேற் றெழுத்தாணையொன்று வழங்கப்படும்படி பணித்தலும் வேண்டும்; அத்துடன் (101 ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் 226 முதல் 297 வரையிலான பிரிவுகளின் ஏற்பாடுகள், அத்தகைய கைப்பற்றுகைக்கும் விற்பனைக்கும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(8) உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதி இப்பிரிவின்கீழ் சான்றிதழொன்றை வழங்கும்போதெல்லாம், அவர் அதேநேரத்தில் தவணைதவறியவருக்கு, அவர் வதிவுள்ள வராயினுஞ்சரி அல்லது வதிவற்றவராயினுஞ்சரி, அதுபற்றிய அறிவிப்பொன்றைப் பதிவஞ்சல்மூலம் வழங்குதல் வேண்டும். தவணை தவறியவரினால் அத்தகைய அறிவிப்பு பெறப்படாமை யானது இப்பிரிவின்கீழான வழக்குநடவடிக்கைகளைச் செல்லு படியற்றனவாக்குதலாகாது.

கைப்பற்றுகை அல்லது விற்பனை, செயல் முறைக்கு உகந்ததற்றதாக இருக்குமிடத்து தவணை தவறுகை யிலுள்ள விசேட பண்டங்கள் மற்றும் சேவைகள் வரிகளை அறவிடுதல்

**13.** (1) (அ) உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதி கைப்பற்றுகை மற்றும் விற்பனைமூலம் தவணை தவறுகையிலுள்ள விசேட பண்டங்கள் மற்றும் சேவைகள் வரியை அறவிடுவது செயல்முறைக்குகந்ததல்ல அல்லது உசிதமானதல்ல என ஏதேனும் விடயத்தில் அபிப்பிராயப்படுமிடத்து அல்லது தவணை தவறுகையிலுள்ள விசேட பண்டங்கள் மற்றும் சேவைகள் வரியின் முழுத்தொகையும் சேகரிக்கப்பட்டிராதவிடத்து, உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதி தவணைதவறுகையிலுள்ள விசேட பண்டங்கள் மற்றும் சேவைகள் வரித்தொகை மற்றும் தவணை

தவறியவரின் பெயர் அத்துடன் கடைசியாக அறியப்பட்ட அவரது தொழிலிடம் அல்லது வதிவிடம்பற்றிய விபரங்களைக் கொண்டுள்ள சான்றிதழொன்றைத் தவணைதவறியவர் வதிகின்ற அல்லது தொழில் கொண்டுநடாத்துகின்ற பிரிவின்மீது நியாயாதிக்கங் கொண்டுள்ள ஒரு நீதிவானுக்கு வழங்கலாம்.

(ஆ) நீதிவான், (1) ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட சான்றிதழைப் பெற்றதன்மீது, தவணைதவறுகையிலுள்ள வரியை அறவிடுவதற்கான மேலதிக வழக்குநடவடிக்கைகள் ஏன் தவணைதவறியவருக்கெதிராக நியாயப்படுத்தப்படமுடியாதெனக் காரணங்காட்டுவதற்குக் குறித்துரைக்கப்பட்டவொரு தேதியன்று அவர் முன்னர் தோன்றுமாறு அத்தகைய தவணைதவறியவரைத் தேவைப்படுத்தி அவருக்கு அழைப்புக்கட்டளை வழங்குதல் வேண்டுமென்பதுடன் போதிய காரணங்காட்டப்படாவிடின், தவணைதவறுகையிலுள்ள விசேட பண்டங்கள் மற்றும் சேவைகள் வரியானது, குற்றப்பணம் ஒன்றினால் மட்டுமே தண்டிக்கப் படற்பாலதும் அல்லது மறியற்றண்டனையினால் தண்டிக்கப்படற் பாலதல்லாததுமானவொரு தவறுக்காக அத்தகைய தவணைதவறியவருக்கு நீதிவானின் தண்டனைத்தீர்ப்பொன்றி னால் விதிக்கப்பட்டவொரு குற்றப்பணமாகக் கருதப்படுதலும் வேண்டும்; அத்துடன் அத்தகையவொரு தவறுக்காக விதிக்கப்பட்ட குற்றப்பணமொன்றைச் செலுத்துவதிலான தவணைதவறுகை தொடர்பாக 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 291 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், (அதன் (அ), (ஈ) மற்றும் (ஐ) என்னும் பந்திகள்தவிர), அதன்மேல் ஏற்புடையனவாதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய தண்டனைத்தீர்ப்பை விதித்த நேரத்தில் அவ்வுட்பிரிவின் ஏற்பாடுகளின்மூலம் நீதிவான் விடுத்திருக்கக்கூடிய ஏதேனும் பணிப்பையும் அவர் விடுக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் வழக்கில் 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 291 ஆம் பிரிவின் (2) முதல் (5) வரையிலான உட்பிரிவுகளிலுள்ளதெதுவும் ஏற்புடையதாதலாகாது.

*(3)* தவணைதவறியவரின் மீது *(1)* ஆம் உட்பிரிவினால் விதிக்கப்பட்டுள்ளதெனக் கருதப்பட்ட குற்றப்பணத்தைச் செலுத்துவதற்குத் தவணைதவறியமைக்காகத் தவணைதவறிய வருக்கு எந்த வழக்கில் மறியற்றண்டனைத்தீர்ப்பு அளிக்கப் படுகின்றதோ அவ்வுட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட அந்த ஏதேனும் வழக்கில், நீதிவான், சொல்லப்பட்ட குற்றப்பணத் தொகையைச் செலுத்துவதற்குப் பன்னிரெண்டு மாதங்களை விஞ்சாத காலத்தை அனுமதிக்கலாம் அல்லது அத்தொகை தவணைப்பணங்களில் செலுத்தப்படுவதனைப் பணிக்கலாம்.

*(4)* நீதிமன்றமானது, *(1)* ஆம் உட்பிரிவின்கண் ஏற்பாடுசெய்யப் பட்டவாறாகக் காரணங்காட்டுவதற்கு அதன்கீழான காலத்தை அனுமதிப்பதற்கான அல்லது *(3)* ஆம் உட்பிரிவின்கீழ் குற்றப் பணத்தைச் செலுத்துவதற்கான முந்நிபந்தனையொன்றாகப் பிணைகொடுக்கப்படுவதனைத் தேவைப்படுத்தலாம் என்பதுடன் 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் XXXIV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகள், பிணைகொடுப்பதற்குத் தவணைதவறியவர் அவ்வாறு தேவைப்படுத்தப்படுமிடத்து ஏற்புடையனவாதலும் வேண்டும்.

*(5)* தவணைப்பணங்களிலான செலுத்துகை *(3)* ஆம் உட்பிரிவின்கீழ் பணிக்கப்படுமிடத்தும் ஏதேனுமொரு தவணைப் பணத்தைச் செலுத்துவதில் தவணைதவறுகை புரியப்படுமிடத்தும் அப்போது செலுத்தப்படாதெஞ்சியுள்ள எல்லாத் தவணைப் பணங்களினதும் செலுத்துகையில் தவணைதவறுகை புரியப்பட்டி ருந்தது என்றாற்போன்று அதே வழக்குநடவடிக்கைகள் எடுக்கப் படலாம்.

*(6)* ஓராம் உட்பிரிவின்கீழான ஏதேனும் வழக்குநடவடிக்கையில், உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதியின் சான்றிதழ், விசேட பண்டங்கள் மற்றும் சேவைகள் வரியானது தவணை தவறுகையிலுள்ளது என்பதற்குப் போதிய சான்றாதல் வேண்டுமென்பதுடன் வரியானது விஞ்சுதலாகவுள்ளது, பிழையாக வுள்ளது அல்லது மேன்முறையீட்டின்கீழுள்ளது என்ற வாதவுரை ஏற்றுக்கவனிக்கப்படுதலுமாகாது.

தாமதக் கொடுப்பனவு மீதான தண்டம்

**14**. இச்சட்டத்தின் கீழ் தேவைப்படுத்தப்பட்ட விசேட பண்டங்கள் மற்றும் சேவைகள் வரி எல்லாவற்றையும் அல்லது அதன் பாகத்தை 9 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட தேதியன்று அல்லது 10 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட அறிவித்தலிற் குறித்துரைக்கப் படக்கூடியவாறான உரிய தேதியன்று அல்லது அதற்கு முன்னர் செலுத்தத்தவறுகின்ற வரிவிதிக்கப்படற்பாலவரான ஆளொருவர், வருமதியாகவுள்ள மொத்தத் தொகையின் பத்துசதவீதத்துக்குச் சமமானவொரு தண்டத்துக்கு ஆளாதல் வேண்டும்.

அலுவலக முறையான இரகசியம்

**15**. (1) உட்பிரிவு (3), (4) அல்லது (5) இல் ஏற்பாடு செய்யப்பட்டவாறு தவிர, இச்சட்டத்தின்கீழ் கடமையொன்றைக் கொண்டுள்ள அல்லது இச்சட்டத்தின் நிருவாகத்தில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள ஒவ்வோராளும் வரிவிதிக்கப் படற்பாலவரான ஓர் ஆள் தொடர்பாக அலுவலகமுறையான தன்மையில் அவ்வாள் பெற்றுள்ள எல்லாத் தகவல்களையும் ஆவணங்களையும் இரகசியமானவையாகவும் அந்தரங்கமானவை யாகவும் கருதுதல் வேண்டுமென்பதுடன் அத்தகவல்களைப் பின்வரும் ஆட்களுக்கு மட்டுமே வெளிப்படுத்தலாம்:-

(அ) இச்சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறாகத் தமது கடமைகளை நிறைவேற்றுகின்ற ஊழியர்களுக்கு;

(ஆ) சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதி, உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதி, மதுவரி ஆணையாளர் தலைமையதிபதி, தொலைத்தொடர்புகள் பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது வேறேதேனும் இயைபான அதிகாரியின் தலைவர் என்போரை மேற்பார்வை செய்யும்போதும், அவர்களின் மேற்பார்வையை நிறைவேற்றுகின்ற நோக்கத்துக்காகவும், அமைச்சருக்கு;

(இ) அலுவலகமுறையான கடமைகளின் நோக்கத்துக்காக அத்தகைய வெளிப்படுத்துகை அவசியமாகவுள்ளபோது மட்டும், கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு அல்லது கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனுமாளுக்கு;

(ஈ) குறிப்பிடப்பட்டவோர் அதிகாரியுடன் செய்துகொள்ளப் பட்ட சர்வதேச உடன்படிக்கைக்கிணங்க, ஒரு வெளிநாட்டின் வரி அதிகாரிகளுக்கு;

(உ) அரசினால் வழக்குகள் தொடுக்கப்படுமிடத்து அல்லது அரசுக்கெதிராக வழக்குகள் கோப்பிடப்படுமிடத்து அல்லது சட்டத்துறைத் தலைமையதிபதியின் அபிப்பிராயம் அல்லது மதியுரை அதிகாரமளிக்கப்பட்ட நிறுவனத்தினால் எழுத்தில் நாடப்பட்டுள்ளவிடத்து, எவையேனும் குற்றவியல் வழக்குநடவடிக்கைகளின் அல்லது குடியியல் வழக்குநடவடிக்கைகளின் நோக்கத்துக்காக, சட்டத்துறைத் தலைமையதிபதிக்கு;

(ஊ) வரிவிதிக்கப்படற்பாலவரான ஓர் ஆளின் வரிப் பொறுப்பை அல்லது தவறொன்றுக்கான பொறுப்புடைமையை நிலைநாட்டுவதற்கான ஒரு வழக்குநடவடிக்கையில், ஒரு நீதிமன்றத்துக்கு;

(எ) 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் மீறுகைகளுக்குக் குற்றவழக்குத் தொடுக்கும் நோக்கத்துக்காக, வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத் தலைவருக்கு;

(ஏ) எவரேனுமாளின் அல்லது எவரேனுமாளின் வாழ்க்கைத்துணையின் அல்லது பிள்ளையின் அலுவல்கள் பற்றிய புலனாய்வொன்றில் (393 ஆம் அத்தியாயமான) விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட ஓர் ஆணைக்குழுவுக்கு; அத்துடன்

(ஐ) 1994 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலஞ்சம் அல்லது ஊழல்பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலஞ்சம் அல்லது ஊழல்பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவுக்கு.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் தகவல்களை வெளிப்படுத்துவதற்கு அனுமதிக்கப்படுகின்ற ஆளொருவர், எந்தக் குறிக்கோளை எய்துவதற்கு வெளிப்படுத்துதல் அனுமதிக்கப்படுகின்றதோ அந்தக் குறிக்கோளை எய்துவதற்கு அவசியமான குறைந்தபட்ச அளவுவரைதவிர, இரகசியத்தைப் பேணுதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் தகவல்களைப் பெறுகின்ற ஆளொருவர், எந்தக் குறிக்கோளை எய்துவதற்குத் தகவல்கள் பெறப்பட்டனவோ அந்தக் குறிக்கோளை எய்துவதற்கு அவசியமான குறைந்தபட்ச அளவுவரைதவிர, இரகசியத்தைப் பேணுதல் வேண்டும்.

(4) பெயர்குறிக்கப்பட்ட அலுவலர், உரிமைக்கோரிக்கையின் மெய்யானதன்மைபற்றி நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக் கொண்டதன்பின்னர் மட்டுமே வரிவிதிக்கப்படற்பாலவரான ஓராளின் அலுவல்கள் சம்பந்தமான தகவல்களை அவ்வரிவிதிக் கப்படற்பாலவரான ஆளுக்கு அல்லது அவ்வரிவிதிக்கப்படற் பாலவரான ஆளின் அதிகாரமளிக்கப்பட்ட முகவருக்கு வெளிப்படுத்தலாம்.

(5) வரிவிதிக்கப்படற்பாலவரான ஆளொருவர் சம்பந்தமான தகவல்கள், வரிவிதிக்கப்படற்பாலவரான ஆளின் எழுத்திலான சம்மதத்துடன் வேறோராளுக்கு வெளிப்படுத்தப்படலாம்.

(6) இப்பிரிவினால் விதிக்கப்பட்ட இரகசியம் பற்றிய கடப்பாடு, எவரேனுமாள் இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் நியமிக்கப்பட்ட வராக இல்லாதொழிகின்றமை அல்லது இச்சட்டத்தின் ஏற்பாடுகளை நிறைவேற்றுவதில் தொழிலுக்கமர்த்தப்பட்டவராக இல்லா தொழிகின்றமை எவ்வாறிருப்பினும், அவ்வாள் தொடர்பில் தொடர்ந்தும் ஏற்புடையதாதல் வேண்டும்.

*கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உறுப்பினரின் அல்லது பங்காளரின் பொறுப்பு*

**16**. ஏதேனும் விசேட பண்டங்கள் மற்றும் சேவைகள் வரித்தொகை தவணைதவறுகையில் உள்ளவிடத்து, அப்போது:-

(அ) தவணைதவறியவர் ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாகவிருப்பின், விசேட பண்டங்கள் மற்றும் சேவைகள் வரியானது தவணைதவறியதாக இருக்கின்ற நேரத்தில் அக்குழுவின் பணிப்பாளர், செயலாளர்

அல்லது ஒத்த அலுவலராக இருந்த ஆளொவ்வொருவரும்; அல்லது

(ஆ) தவணைதவறியவர் ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாகவிராத குழுவாகவிருப்பின், விசேட பண்டங்கள் மற்றும் சேவைகள் வரியானது தவணைதவறியதாக இருக்கின்ற நேரத்தில் அக்குழுவின் உறுப்பினராக அல்லது பங்காளராக இருந்த ஆளொவ்வொரு வரும்,

விசேட பண்டங்கள் மற்றும் சேவைகள் வரியானது அவர் அறியாமல் தவணைதவறியதாகவுள்ளது அல்லது வருமதியாகவிருந்த விசேட பண்டங்கள் மற்றும் சேவைகள் வரிக் கொடுப்பனவை உறுதிப்படுத்துவதற்கு அவர் உரிய விழிப்புக்கவனத்தைப் பிரயோகித்தார் என அவர் எண்பித்தாலொழிய, நேரடியாக ஆளாகவுள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டும்.

*செலவுகள் திரட்டு நிதியத்திலிருந்து செலுத்தப் படுதல் வேண்டும்*

**17.** (1) ஏதேனும் நீதிமன்றத்தின்முன்னர் பெயர்குறிக்கப்பட்ட அலுவலரினால் அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரினால் அல்லது அவருக்கெதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அவரினால் உறப்பட்ட எல்லாச் செலவுகளும் திரட்டு நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் பெயர்குறிக்கப்பட்ட அலுவலருக்கு அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலருக்குச் செலுத்தப்பட்ட அல்லது அவரினால் அறவிடப்பட்ட செலவுதொகைகள் மட்டுமே திரட்டு நிதியத்துக்கு வரவுவைக்கப்படுதலும் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழ் பெயர்குறிக்கப்பட்ட அலுவலரினால் அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரினால் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பில் அவ்வலுவலரினால் அல்லது அவருக்கெதிராக ஏதேனும் நீதிமன்றத்தின்முன்னர் கொணரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அவரினால் உறப்பட்ட எவையேனும் செலவுகள், அத்தகைய செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதென நீதிமன்றம் தீர்த்தால்,

அத்தகைய செலவுகள் அத்தகைய துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அவரினால் அறவிடப்பட்டாலொழிய, திரட்டு நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

*நிலை பெயர்கால ஏற்பாடுகள்*

**18**. எவையேனும் குறித்துரைக்கப்பட்ட பண்டங்கள் அல்லது சேவைகள் தொடர்பில் விதிக்கப்பட்ட ஏதேனும் வரி, தீர்வை, அறவீடு ஆயவரி அல்லது வேறேதேனும் விதிப்பனவு, 2 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்று நடைமுறைக்கு வருவதற்குமுன்னரான நாளன்று இதற்கான அட்டவணையிற்றரப்பட்டுள்ள ஏதேனும் சட்டவாக்கத்தின் நியதிகளின்படி செலுத்தப்படற்பாலதாகவிருக்குமிடத்து, அத்தகைய வரி, தீர்வை, அறவீடு, ஆயவரி அல்லது வேறேதேனும் விதிப்பனவு, 2 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழ் கட்டளையொன்று ஆக்கப்பட்டமை எவ்வாறிருப்பினும், அத்தகைய சட்டவாக்கங்களின் நியதிகளின்படி அறவிடப்படற்பாலதாகத் தொடர்ந்திருத்தல் வேண்டும்.

*ஒழுங்கு விதிகள்*

**19**. (1) விதித்துரைக்கப்படவேண்டுமென இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்படுகின்ற எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது இச்சட்டத்தின் கீழ் எக்கருமங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப் படுகின்றதோ அல்லது அதிகாரமளிக்கப்படுகின்றதோ அக்கருமங்கள் தொடர்பில் அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றி, அமைச்சர் பின்வரும் கருமங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்:-

(அ) பெயர்குறிக்கப்பட்ட அலுவலரின் மின்னஞ்சல் முகவரி;

(ஆ) இச்சட்டத்தின் கீழான விசேட பண்டங்கள் மற்றும் சேவைகள் வரியைச் செலுத்துவதற்கு ஆளாகவுள்ள ஓர் இறக்குமதியாளர், ஓர் உற்பத்தியாளர் அல்லது ஒரு சேவை வழங்குநரின் பதிவுக்கான படிவமும், கட்டணங்களும், பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறையும்;

(இ) வரிவிதிக்கப்படற்பாலவரான ஆளுக்கு வழங்கப்பட வேண்டிய பதிவுச்சான்றிதழின் படிவம்;

(ஈ) 8 ஆம் பிரிவின் நோக்கத்துக்காகத் தகைமைபெற்ற கணக்காய்வாளரொருவரினால் வழங்கப்பட்ட சான்றிதழின் படிவம்;

(உ) 8 ஆம் பிரிவின் நோக்கத்துக்காக ஆவணங்களில் அடக்கப்பட்டிருக்கவேண்டிய விபரங்கள்;

(ஊ) செலுத்தப்பட்டிருக்கவேண்டிய உள்ளபடியான தொகைக்கு விஞ்சுதலாக விசேட பண்டங்கள் மற்றும் சேவைகள் வரியாக வரிவிதிக்கப்படற்பாலவரான ஓராளினாற் செலுத்தப்பட்ட தொகையின் மீளளிப்புக்கான கோரிக்கையைச் செய்வதில் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கைமுறையும் முறையும்;

(எ) வரிவிதிக்கப்படற்பாலவரான எவரேனுமாளினால் இறக்குமதிசெய்யப்பட்ட அல்லது உற்பத்திசெய்யப்பட்ட எவையேனும் குறித்துரைக்கப்பட்ட பண்டங்கள்மீதான அல்லது வழங்கப்பட்ட ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட சேவைமீதான தகவல்களை வழங்கும் நோக்கத்துக்காகச் சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதியினால், உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதியினால், மதுவரி ஆணையாளர் தலைமையதிபதியினால், தொலைத்தொடர்புகள் பணிப்பாளர் தலைமையதிபதியினால் அல்லது அத்தகைய வேறு இயைபான அதிகாரியின் தலைவரினால் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறை; அத்துடன்

(ஏ) இச்சட்டத்தின் கீழ் விதித்துரைக்கப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் கருமத்துக்காக அல்லது இச்சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் எந்தக் கருமம் தொடர்பில் ஆக்கப்படுவதற்கு அதிகாரமளிக்கப்பட்டதோ அந்த ஏதேனும் கருமத்துக்காக ஏற்பாடுசெய்தல்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒவ்வோர் ஒழுங்குவிதியும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன் வெளியீட்டுத் தேதியன்று அல்லது அதன்கண் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒவ்வோர் ஒழுங்குவிதியும், அது வர்த்தமானியில் வெளியிடப்பட்டபின்னர் மூன்று மாதங்களுக்குப் பிந்தாமல் அங்கீகாரத்துக்காகப் பாராளுமன்றத்தின் முன்னர் இடப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒவ்வோர் ஒழுங்குவிதியும் அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) ஏதேனும் ஒழுங்குவிதி அவ்வாறு ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படும் தேதிபற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

பொருள் கோடல்

**20**. இச்சட்டத்தில், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய–

"அதிகாரமளிக்கப்பட்ட முகவர்" என்பது, பின்வருவோர் என்று பொருளாகும்:-

(அ) வரிவிதிக்கப்படற்பாலவரான ஆளொருவரினால், இச்சட்டத்தின் நோக்கத்துக்காக அவரது சார்பில் செயலாற்றுவதற்கு எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்டவரும் விடயங்கள் (i), (ii) மற்றும் (iii) இல் குறித்துரைக்கப்பட்டவருமான எவரேனும் தனியாள்:-

(i) 1959 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, பட்டயம்பெற்ற கணக்காளர்கள் நிறுவகச் சட்டத்தின் 2ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட

இலங்கைப் பட்டயம்பெற்ற கணக்காளர்கள் நிறுவகத்தின் உறுப்பினரொருவர்;

(ii) சட்டத்தரணியொருவர்; அல்லது

(iii) அவ்வாளினால் கிரமமாகத் தொழிலுக்கமர்த்தப்பட்ட ஊழிய ரொருவர்;

(ஆ) வரிவிதிக்கப்படற்பாலவரான ஆள் ஒரு தனியாளாக இருக்குமிடத்து, இச்சட்டத்தின் நோக்கத்துக்காக அவரது சார்பில் செயலாற்றுவதற்கு வரிவிதிக்கப்படற்பால வரான ஆளினால் எழுத்தில் அதிகார மளிக்கப்படும் உறவினரொருவர்;

(இ) வரிவிதிக்கப்படற்பாலவரான ஆள் இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்படும் கம்பெனியொன்றாக இருக்குமிடத்து, அக்கம்பெனியின் பணிப்பாளர், செயலாளர் அல்லது பிரதான அலுவலர்;

(ஈ) வரிவிதிக்கப்படற்பாலவரான ஆள் ஒரு பங்காண்மையாக இருக்குமிடத்து, பங்காள ரொருவர்;

(உ) வரிவிதிக்கப்படற்பாலவரான ஆள் ஒரு நம்பிக்கைப்பொறுப்பாக இருக்குமிடத்து, நம்பிக்கைப்பொறுப்பாளரொருவர்;

(ஊ) வரிவிதிக்கப்படற்பாலவரான ஆள் ஒரு பங்காண்மை அல்லது கம்பெனி அல்லாத ஆட்கள் குழுவொன்றாக இருக்குமிடத்து, அவ்வாட்கள் குழுவின் சார்பில் நிதியங்களி

லிருந்து பணங்களை பெறுகின்றமை மற்றும் கொடுப்பனவு செய்கின்றமை தொடர்பிலான கணக்கீட்டுக்குப் பொறுப்பாகவுள்ள தனியாளொருவர்;

(எ) வரிவிதிக்கப்படற்பாலவரான ஆள் ஒரு வதிவற்றவராக இருக்குமிடத்து, இலங்கையில் அவ்வாளின் ஒரு தொழிலின் முகாமையாளர் உட்பட, இலங்கையில் அவ்வாளின் அலுவல்களைக் கட்டுப்படுத்துகின்ற ஆளொருவர்;

"மதுவரி ஆணையாளர் தலைமையதிபதி" என்பது, (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் 7 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் நியமிக்கப்பட்ட மதுவரி ஆணையாளர் தலைமையதிபதி என்று பொருளாகும்;

"உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதி" என்பது, 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 97 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் நியமிக்கப்பட்ட உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதி என்று பொருளாகும்;

"சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதி" என்பது, (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் நியமிக்கப்பட்ட சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதி என்று பொருளாகும்;

"தொலைத்தொடர்புகள் பணிப்பாளர் தலைமையதிபதி" என்பது, 1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, இலங்கைத் தொலைத்தொடர்புகள் சட்டத்தின் 22ஆ என்னும் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் நியமிக்கப்பட்ட தொலைத்தொடர்புகள் பணிப்பாளர் தலைமையதிபதி என்று பொருளாகும்;

"உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி" என்பது, 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழில் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் உரிமமளிக்கப்பட்டவொரு வங்கி என்று பொருளாகும்;

"*மதுபானம்*" என்பது, வைனின் மதுசாரங்களை, மதுசாரங்களை, வைனை, கள்ளை, பியரை மற்றும் அற்ககோலைக் கொண்டுள்ள அல்லது அடக்கியுள்ள எல்லாத் திரவங்களையும், மற்றும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக மதுபானமாகக் கருதப்படுவதற்கு அமைச்சர் அறிவிப்பின்மூலம் வெளிப்படுத்தக்கூடிய ஏதேனும் பொருளையும் உள்ளடக்கும்;

"*அமைச்சர்*" என்பது, அரசியலமைப்பின் 44 ஆம் அல்லது 45 ஆம் உறுப்புரையின்கீழ் இச்சட்டம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சர் என்று பொருளாகும்;

"*தகைமைபெற்ற கணக்காய்வாளர்*" என்பது -

(அ) இலங்கைப் பட்டயம்பெற்ற கணக்காளர்கள் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினராகவிருந்து, கணக்காளரொருவராகத் தொழில்புரிவதற்கு அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டுள்ள ஒரு தனியாள்; அல்லது

(ஆ) வதிவுள்ள பங்காளர்களுள் ஒவ்வொருவரும் இலங்கைப் பட்டயம்பெற்ற கணக்காளர்கள் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினராகவிருந்து, கணக்காளராகத் தொழில்புரிவதற்கு அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டுள்ள ஒரு கணக்காளர்கள் குழுமம்,

என்று பொருளாகும்; அத்துடன்

"காலாண்டு" என்பது, ஒவ்வோராண்டினதும் சனவரி முதலாம் நாளன்று, ஏப்பிறல் முதலாம் நாளன்று, யூலை முதலாம் நாளன்று மற்றும் ஒற்றோபர் முதலாம் நாளன்று தொடங்குகின்ற மூன்றுமாதக் காலப்பகுதி என்று பொருளாகும்.

*ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

***21***. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

**அட்டவணை** [பிரிவு 3]

| | நிரல் I<br>சட்டவாக்கத்தின் பெயர் | நிரல் II<br>முறையான வரி |
|---|---|---|
| 1. | (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச்சட்டம் | உற்பத்தித் தீர்வை |
| 2. | 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டம் | உற்பத்தித் தீர்வை |
| 3. | 2011 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, தொலைத்தொடர்புகள் அறவீட்டுச் சட்டம் | தொலைத்தொடர்புகள் அறவீடு |
| 4. | 2018 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, நிதிச்சட்டம் | (i) செல்லிடத் தொலை பேசிக் கோபுர அறவீடு<br>(ii) ஆடம்பர மோட்டார் வாகனம்மீதான வரி<br>(iii) செல்லிடத்தொலைபேசி குறுஞ்செய்திச் சேவைமீதான அறவீடு<br>(iv) வாகன உரித்துடைமை அறவீடு |
| 5. | 1988 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, பந்தயம் பிடித்தல் மற்றும் சூதாடுதல் அறவீட்டுச் சட்டம் | முழு மொத்த சேகரிப்பின் மீதான அறவீடு |
| 6. | (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச்சட்டம் | சுங்கத் தீர்வை |
| 7. | 1979 ஆம் ஆண்டின் 40ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம் | ஆயவரி |
| 8. | 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுகங்கள் மற்றும் விமானநிலையங்கள் அபிவிருத்திச் சட்டம் | துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீடு |